கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.138/2020** தேதி: **04.02.2026**

வாதி தரப்பு சாட்சி -1 (மோகனகிருஷ்ணன், த/பெ.ராம்தாஸ்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1-**ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

(1) வழக்கு தாக்கல் செய்ய எனக்கு யார் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள் என்றால் நானே தான் ஏற்பாடு செய்து வழக்கு தாக்கல் செய்தேன்.யார் யார் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் நான், எனது மணைவி, கிருஷ்ணராஜனின் மகன் மற்றும் கிருஷ்ணராஜ்னின் நண்பர் ஆகியோர் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம். ஆகவே 3 , 4 ஆம் வாதிகளின் பெயர் என்ன என்றால் ஆளைத்தெரியும் பெயர் ஞாபகம் இல்லை.

(2) வழக்கு எவ்வளவு சொத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞபாகம் இல்லை. வழக்கு சொத்து இன்றைய தேதியில் எனக்கு பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. பாத்தியம் உள்ளது. நான் எந்த வழக்கறிஞரை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அருண்குமார் மற்றும் முருகன் ஆகிய இரு வழக்கறிஞரை வைத்து தாக்கல் வழக்கு செய்துள்ளேன்.

(3) இவ்வழக்கிற்கான பிராதை யார் தயார் செய்தார்கள் என்றால் அருண்குமார் மற்றும் முருகன் ஆகிய இரு வழக்கறிஞர் தயார் செய்தார்கள். அந்த பிராதில் முருகன் என்ற வழக்கறிஞரின் பெயர் மட்டும் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கு விவரங்களை இருவரிடம் தான் சொன்னேன். முருகன் பெயர் மட்டும் இருக்க காரணம் என்ன என்றால் எனக்கு தெரியாது.

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.04 17:15:40 +0530

இந்த வழக்கில் இது நாள் வரை வழக்கறிஞர் முருகன் இதுவரை வழக்கிற்காக ஆஜராகவில்லை என்றால் சரியல்ல.

(4) 02.02.2026 தேதி அன்றும் இன்றும் வழக்கறிஞர் முருகன் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல, வந்தார். எனக்கு 1-ஆம் பிரதிவாதியை தெரியுமா என்றால் தெரியும். 1-ஆம் பிரதிவாதி என்ன வேலை செய்கிறார் என்றால் ராஜகோபாலன் நகை கடையில் குமாஸ்தாவாக இருந்தார். அவர் குமாஸ்தாவாக இருந்தார் என்பதை நான் எவ்வாறு கூறுகிறேன் என்றால் நகை கடைக்கு சென்று வரும் போது நான் பார்த்து இருக்கிறேன்.

(5) பிரபாகரன் நகைக்கடையில் குமாஸ்தா என்று வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராஜகோபால் நகைக்கடை மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார் என்றால் நகைகடை பற்றி மட்டும் தான் எனக்கு தெரிபும் ரியல் எஸ்டேட் பற்றி எனக்கு தெரியாது.

(6) ராஜகோபால் ரியல் எஸ்டேட் தொழிலில் இருந்ததால் தான் அவர் பெயரில் பவர் பத்திரம் எழுதினேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து மட்டும் தான் எனக்கு பாத்தியமா அல்லது அது தவிற வேறு சொத்துக்களும் எனக்கு பாத்தியம் என்றால் வேறு சொத்துக்களும் உண்டு. ஏற்கனவே எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து ஜெகதீசன் என்பவருக்கு நான் பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான்.

(7) அந்த பவர் பத்திரத்தில் மூலம் ஜெகதீசன் வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள சொத்துக்களை தெய்வானை என்பவருக்கு விற்றார் என்றால் சரிதான். விற்றப்பின் அந்த பணத்தை அவர் எனக்கு தராததால் அந்த பவர் பத்திரத்தை

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2026.02.04 17:15:44 +0530

நான் ஒருதலையாக ரத்து செய்துவிட்டேன். ஜெகதீசனும் ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர் என்றால் சரியல்ல. ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர்கள் பவர் பத்திரம் எழுதி வாங்கும் போதே நிலத்திற்கான பணத்தை கொடுத்துவிட்டு தான் பத்திரம் வாங்குவார்கள் என்றால் சரியல்ல.

(8) ராஜகோபாலுக்கு நான் எழுதிக்கொடுத் பவர் பத்திரமான வா.த.சா.ஆ. 2ல் இந்த சொத்து சம்மந்தமாக விற்பனை செய்யவும் வழக்கு நடத்துவதற்கும் என பொது அதிகாரம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அது பொதுவான வாசகம் எனவே கையொப்பம் இட்டேன். வா.த.சா.ஆ. 2ல் உள்ள வாசகத்தின் அடிப்படையில் தான் 1 ஆம் பிரதிவாதி பெயருக்கு 2 ஆம் பிரதிவாதி கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான்.

(9) ஆகவே அந்த கிரைய ஒப்பந்தமான வா.த.சா.ஆ 3 ஆனது என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. என்னை கட்டுப்படுத்தாது. நீதிமன்றத்தால் அந்த ஒப்பந்தம் செல்லாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. அந்த ஒப்பந்தம் போடப்பட்ட விவரம் எனக்கு உடனே தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது வாக்குமூலத்தில் "கிரைய ஒப்பந்தம் போட்டு என்னை மோசடி செய்ய திட்டமிட்டதால் நான் எழுதிக்கொடுத்த அதிகாரப்பத்திரத்தை செயல்படுத்த வேண்டாம் என்று தெரிவித்து விட்டேன்" என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

(10) எப்போது தெரிவித்தேன் என்றால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை. பொது அதிகாரப்பத்திரமான வா.த.சா.ஆ 2 ஐ ரத்து செய்யவதற்கு அறிவிப்பு எப்போது அனுப்பட்டது என்றால் தேதி ஞாபகம் இல்லை . அசல் வழக்கு 71/2006

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.04 17:15:57 +0530

நிலுவையில் இருக்கும் போது அனுப்பட்டது. முதலில் அனுப்பட்ட அறிவிப்பை அவர் வாங்க வில்லை எனவே பவர் பத்திரத்தை ரத்து செய்துவிட்டு மீண்டும் அறிவிப்பை அனுப்பினேன். அதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது.

(11) நான் பவர் ரத்து செய்த விவரமே ராஜகோபாலுக்கு தெரியாது என்றாலும் நான் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதி பெயருக்கு தாவா சொத்து சம்மந்தமாக முழு உரிமையும் கொடுத்து பவர் பத்திரம் எழுதிவிட்ட பிறகு அதை ரத்து செய்ய எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. அதிகாரம் உள்ளது.

(12) கிருஷ்ணராஜ் என்பவர் என்ன வேலை பார்த்தார் என்றால் கோ ஆப் டெக்ஸ் செயலாளராக இருந்தார். அவர் சங்கத்தில் கையாடல் செய்ததாக அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அவர் அந்த வேலையில் இருந்து கொண்டே ரியல் எஸ்டேட் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. (இவ்வழக்கிற்கு இது தொடர்பற்றது என்று வாதி வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவிக்கிறார்)

(13) கிருஷ்ணராஜ்க்கு பிரச்சனை உள்ள நிலங்களை குறைந்த விலைக்கு வாங்குவது தான் தொழில் என்றால் எனக்கு தெரியாது. கிருஷ்ணராஜ் - யை எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் தலைவராக இருந்தேன். அப்போது வேலை சம்மந்தமாக அங்கு வரும் போது பழக்கம். சொத்து சம்மந்தமாக நான் அவரிடம் கேட்டேனா அல்லது அவர் என்னிடம் கேட்டாரா என்றால் நான் தான் அவரிடம் கேட்டேன்.

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.04 17:16:01 +0530

(14) சொத்தை எனது மணைவி பெயருக்கு நான் ஏன் செட்டில் மெண்ட் எழுதினேன் என்றால் 2018 ல் தீர்ப்பு வந்த பிறகு எனது உறவினர்களின் அறிவுறுத்துதலில் பெயரில் நான் எனது மணைவியின் பெயருக்கு எழுதினேன். கிருஷ்ணராஜ் சொல்லி எழுதினேனா என்றால் சரியல்ல. அவருக்கு செட்டில் மெண்ட் பற்றி தெரியாது.

(15) அந்த செட்டில்மெண்ட்டில் யார் சாட்சி கையொப்பம் இட்டார்கள் என்றால் செல்வராஜ் என்பவர் சாட்சி கையொப்பம் இட்டார். மற்றொரு சாட்சி யார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.த.சா. ஆ 9 ஆன தான செட்டில் மெண்ட் பத்திரத்தில் கிருஷ்ணராஜ் மற்றொரு சாட்சியாக கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான்.

(16) நரேஷ் குமார் என்பவர் யார் என்றால் சேட்டு ஆகும். அவர் யார் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் என் மீது வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கான அசல் வழக்கு எண் 71/2006 ஆனது எனக்கு சாதகமாக தீர்ப்பானது. அந்த வழக்கும் தற்போது உள்ள வழக்கு சொத்திற்கு சம்மந்தமானது என்றால் சரிதான். அந்த வழக்கு சொத்தும் இந்த வழக்கு சொத்தும் ஒன்று தான் என்றால் சரிதான். அந்த வழக்கானது நரேஷ் குமாருக்கு சாதகமாக தான் தீர்ப்பானது என்றால் சரியல்ல.

(17) ஆகவே வா.த.சா.ஆ 5 ஆன அந்த தீர்ப்புரை அதை நிறுப்பிக்கிறது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 71/2006 ல் உள்ள சொத்தும் இந்த வழக்கில் உள்ள சொத்தும் ஒரே சொத்து என்பதாலும் வா.த.சா. 5 ன் படி அது நரேஷ் குமாருக்கு பாத்தியம் என்று தீர்ப்பாகி விட்டது என்பதாலும் நான் வழக்கு

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2026.02.04 17:16:05 +0530

சொத்திற்கு உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. எனக்கு சாதகமாக தான் தீர்ப்பாகியுள்ளது. இந்த வழக்கில் வழக்கு சொத்து எனக்கு பாத்தியமானது என்று பரிகாரம் கோராமல் ஆவணங்களை மட்டும் ரத்து செய்ய வேண்டும் என்று கோருவது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஏற்கனவே இரண்டு நீதிமனற்ங்களால் விளம்புகை பரிகாரம் எனக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

(18) 1 ஆம் பிரதிவாதி பிரபாகரன் பெயருக்கு நீதிமன்றத்தின் மூலம் கிரையப்பத்திரம் ஏற்படுத்தப்பட்ட பிறகு தான் நான் எனது மணைவிக்கும் 3 மற்றும் 4 வாதிகளுக்கு பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை. ஆகவே நான் நான் எனது மணைவிக்கும் 3 மற்றும் 4 வாதிகளுக்கு எழுதிக்கொடுத்த பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல.

(19) 1 ஆம் பிரதிவாதிக்கு கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது பற்றியும் அவர் பெயருக்கு கிரையப்பத்திரம் ஏற்பட்டது பற்றியும் எனக்கு முன்பாகவே தெரியும் என்றால் எனக்கு தெரியாது. தெரிந்து இருந்தால் அப்போதே வழக்கு தாக்கல் செய்து இருப்பேன். அசல் வழக்கு எண் 71/2006 ல் ராஜகோபால் வழக்கு நடத்தினார் என்றால் பணம் மட்டும் வாங்கினார் ஆனால் நடத்தவில்லை.

(20) அசல் வழக்கு எண் 71/2006 ல் வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து ராஜகோபால் மேல்முறையீடு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். ஆனால் அதிலும் அவருக்கு சாதகமாக தீர்ப்பு வரவில்லை. 1 ஆம் பிரதிவாதி பெயருக்கு எனது பவர் ஏஜெண்ட் மூலமாக ஏற்படுத்தியுள்ள கிரைய பத்திரமானது என்னை கட்டுப்படுத்தும் என்றாலும் அந்த பத்திரத்தில் உள்ள

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2026.02.04 17:16:09 +0530

நிலத்திற்கான மதிப்பின் அடிப்படையில் தான் நீதிமன்றகட்டணம் செலுத்தி இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. நீதிமன்றமே அந்த அதிகாரப்பத்திரம் செல்லாது என்று தீர்ப்பு அளித்துள்ளது.

(21) இந்த வழக்கில் 1-ஆம் பிரதிவாதி தான் தாவா சொத்தின் உரிமையாளர் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் என்ன உள்ளது என்றால் ஒரு கொட்டகை மற்றும் வேலி போடப்பட்டுள்ளது. நான் அவ்வபோது Real Estate செய்பவரிடம் பவர் எழுதிக் கொடுப்பதும் பின்பு அதை ரத்து செய்வதும் தான் எனது வழக்கம் என்றால் சரியல்ல. இந்த வழக்கானது 1-ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்தம் மற்றும் அந்த கிரைய ஒப்பந்தத்தின் படி ஏற்படுத்தப்பட்ட கிரைய பத்திரம் பற்றி அறிந்தும் 14 வருடங்கள் கழித்து நடத்தப்படுகிறது என்றாலும் ஆகவே அது காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. 14 வருடங்கள் வழக்கு நிலுவையில் இருந்தது.

(22) வழக்கு சொத்தினை 1-ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தற்போது எனக்கு ஆஜராகும் வழக்கறிஞர் 1-ம் பிரதிவாதிக்கு ஆதரவாக வழக்கு நடத்தினார் என்றாலும் அதை பயன்படுத்தி ஆவணங்களை வாங்கி எனக்கு ஆதரவாக தாக்கல் செய்கிறார் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு எந்த வகையிலும் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.

குறுக்கு விசாரணை முற்றிற்று. மறுவிசாரணை இல்லை.

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2026.02.04 17:16:12 +0530

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.04 17:16:16 +0530

***Additional District Munsif , Cuddalore.***